## தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை
## 9/428, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை, பத்தரமுல்ல.

### வரலாற்றுச் சுருக்கம்

நாட்டின் சகல பிரதேசங்களிலும் பரந்துள்ள தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு தேவையான வழிகாட்டலையும், உதவிகளையும் வழங்கும் நோக்குடன் 1971 ம் ஆண்டின் 46 ம் இலக்க சட்டமூலத்தினூடாக தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை ஸ்தாபிக்கப்பட்டது. நிதி மற்றும் உள்ளீட்டு உதவிகளினூடாக, தெங்கு உற்பத்தியை அதிகரிப்பதற்கும், ஒரு நிலையான தென்னைப் பயிர்ச் செய்கையை வைத்திருப்பதற்கும், தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களை ஊக்குவிப்பதே பிரதான காரியமாகும்.
மேலும் பிராந்தியக் காரியாலையங்களினூடாகவும், தென்னை நாற்றுமேடைகளின் ஊடாகவும் அதிக விளைச்சலைக் கொடுக்கக் கூடிய நல்ல தரமான தென்னம் பிள்ளைகளை பயிர்ச் செய்கையாளர்களுக்கு அறிமுகம் செய்வதுமாகும்.

### பிரதான பிரிவுகள்

- ஸ்தாபன மனிதவளப்பகுதி
- விரிவாக்கம் மற்றும் பண்ணை திட்டமிடல்ப் பகுதி
- நிதிப் பிரிவு
- விதை மற்றும் நடுகை உள்ளீட்டுப் பிரிவு
- திட்டமிடல் பிரிவு
- உள்ளகக் கணக்காய்வுப் பகுதி

### நோக்கங்கள்

நாட்டின் தேசிய உற்பத்தி இலக்கான 3500 மில்லியனைப் பெறுவதும், இதைத் தொடர்ந்து எதிர் வரும் 3 வருடங்களுக்கு நிலையாக வைத்திருப்பதற்காக, சகல தேங்காய் உற்பத்தி செய்யும் சமூகத்தின் அறிவு, தகவல்கள் ஆகியவற்றை மேம்படுத்தி தேங்காய் உற்பத்தியை அதிகரிப்பதாகும்.

உதவிகள் வழங்குவதன் மூலம், நலிவுற்று பயன் தராத தென்னந் தோட்டங்களிலும், மற்றும் பொருத்தமான புது இடங்களிலும் தென்னையை புதிதாக நாட்டி, தென்னைப் பரப்பளவை 1 மில்லியன் ஏக்கராக வைத்திருப்பதை உறுதிப்படுத்துவதுமாகும்.

தென்னந் தோட்டங்களின் உபயோகங்களையும், உற்பத்தி மட்டத்தையும் கூட்டுவதற்காக தென்னந் தோட்டங்களில் வேறு பயிர்களையும், கலப்பு விவசாய முறைகளையும் மேற்கொள்ளுவதற்காக தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு உதவிகளையும் / ஊக்குவிப்புக்களையும் வழங்குதல்.

### நடவடிக்கைகள்

தென்னைப் பயிர்ச் செய்கையாளர்களுக்கு பல தொடர்ச்சியான சேவைகளை தென்னைப் பயிர்ச் செய்கைச் சபை வழங்கி வருகின்றது. தேவைகளுக்கு ஏற்ப வருடா வருடம், போகத்திற்கு போகம் திட்டங்கள் மாறுபடும்.

பிரதானமானவை கீழ் தரப்பட்டுள்ளது. :-

1. ஆலோசனை மற்றும் விரிவாக்க சேவை.
2. உள்ளீடு மற்றும் பொருட்கள் உதவி

3. பகுதி நிதி உதவி
4. தென்னந் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான கடன் வசதி.

**தொடர்பு கொள்ளவும் :-**

| **பெயர்** | **தோ.பே. இலக்கம்** | **தொலை நகல்** | **மின் அஞ்சல்** |
|---|---|---|---|
| தலைவர், கலாநிதி எச்.ஏ. ஜயந்த குணதிலக்கா | 5549501 | 5549507 | ccb@sltnet.lk |
| பொது முகாமையாளர், திருமதி S. சுஜாதா குறேறா | 5549502 | 5549507 | Ccb.gm@sltnet.lk |
| பொது தொலைபேசி இலக்கங்கள் | 2861331 | 5549507 | ccb@sltnet.lk |

வலைப் பின்னல் :- www.coconut.gov.lk